**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.39/2024 |
| Deposition of Witness for | : PW-3 |
| Name and Age | : சுப்பிரமணி (வயது 42) |
| Father / Husband Name | : பெருமாள் |
| Occupation | : டெய்லர் |
| Village | : ஜக்கசமுத்திரம் |
| Taluk | : பாலக்கோடு |

**நாள்** – 18.04.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused Present**

**PW– 3**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் ஜக்கசமுத்திரத்தில் குடியிருந்து டெய்லராக வேலை செய்து வருகிறேன். கடந்த 14.11.2023ம் தேதி பிள்ளையார் கோவில் அருகே பிக்கப்லாரி லோடு ஏற்றிக்கொண்டு வந்த விளையாடிக்கொண்டிருந்த 3 வயது பையன் திணேஷ் என்பவர் தலையின் மீது ஏறி விபத்து ஏற்படுத்தியதில் சம்பவ இடத்திலேயே திணேஷ் இறந்துவிட்டார். பிக்கப் வாகனம் சிறிது தூரம் சென்று நின்றது. அப்போது நான் அருகில் தான் இருந்தேன். திணேஷை ஆம்புலன்ஸ் ஏற்றி அனுப்பி வைத்தோம். மறுநாள் காலை சுமார் 11.00மணிக்கு காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தார்கள். பின் சம்பவ இடத்தை வரைபடம் வரைந்தார்கள். பின் எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னுடன் சேர்ந்து கோவிந்தராஜ் என்பவரும் கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வைமகஜர் அ.சா.ஆ 2–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். பிக்கப் வாகனத்தை ஓட்டி வந்த நபரை எனக்கு அடையாளம் தெரியுமா என்றால் அவர் வண்டியை நிறுத்திவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார்.

AJAY VIKRESH KUMAR G Digitally signed by AJAY VIKRESH KUMAR G Date: 2026.04.18 13:09:59 +0530

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் 6–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழில் படிக்க தெரியும். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போலவே போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். எனது டெய்லர் கடைக்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 15 மீட்டர் தூரம் இருக்கும். சம்பவ சாலை வடக்கு தெற்காக செல்கிறது. சாலையில் எந்த திசையில் எனது கடை உள்ளது என்றால் கிழக்கு திசையில் எனது கடை உள்ளது. கடையில் வேறு நபர்கள் என்னுடன் இல்லை. கடையில் நான் துணி தைத்துக்கொண்டிருந்தேன். நான் கடையில் துணி தைத்துககொண்டிருந்தேன் வெளியே சத்தம் கேட்டதும் ஓடிச்சென்று சம்பவ இடத்தை பார்த்தபோது விபத்து நடைபெற்று இருந்தது. நான் சம்பவ இடம் சென்றபோது கூட்டம் கூடியிருந்தது சுமார் 100–150 நபர்கள் கூடியிருந்தார்கள். சம்பவ சாலையானது முதலில் வளைந்து பின்னர் நேராக சென்று மீண்டும் வளைந்து செல்கிறது என்றால் சரிதான். சம்பவ சாலையில் வேகத்தடைகள் உள்ளது என்றால் சரிதான். வேகத்தடைகள் சிறிதாக இருந்தது. சம்பவ சாலை நேராக எவ்வளவு தூரம் உள்ளது என்றால் 3–4மீட்டர் தூரம் உள்ளது. வாகனத்தில் சரக்கு ஏற்றப்பட்டிருந்ததா என்றால் தக்காளி ஏற்றப்பட்டிருந்தது. வளைவில் வளைந்து வேகத்தடையை தாண்டி 4 மீட்டர் சாலையில் வேகமாக செல்ல முடியாது என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் நான் சம்பவத்தை நேரடியாக பார்த்தாக சொன்னேனா என்றால் பத்து நிமிடம் கழித்து தான் தெரியும் என போலிசார் விசாரணையில் சொன்னேன். மாதிரி வரைபடத்தில் சாலையின் கிழக்கு திசையில் எனது கடை குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளதா என்றால் மாதிரி வரைபடத்தில் காட்டப்படவில்லை. அ.சா.1 எனது தம்பி உறவு முறை ஆகும். விபத்தில் இறந்தவர் எனது தம்பி மகன் என்பதால் விபத்தை நேரடியாக பார்த்தாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதைபோல் எதிரி வாகனத்தை வேகமாக இயக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி சாலை வளைவான பகுதி என்பதாலும், வேகத்தடை பகுதி உள்ளதாலும் வேகமாக இயக்கவில்லை என்றால் சரியல்ல. குழந்தை எந்த சக்கரத்தில் அடிப்பட்டது என்றால் வண்டியின் முன்பகுதியில் இடித்து பின் சக்கரம் ஏறி விபத்து ஏற்பட்டது. குழந்தை விளையாடிக்கொண்டு பின்சக்கரத்தில் விழுந்து தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.04.18 13:10:08 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.39/2024 |
| Deposition of Witness for | : PW-4 |
| Name and Age | : பிரபாகரன் (வயது 36) |
| Father / Husband Name | : முனியப்பன் |
| Occupation | : விவசாயம் |
| Village | : ஜக்கசமுத்திரம் |
| Taluk | : பாலக்கோடு |

**நாள்** – 18.04.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused Present**

**PW– 4**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் ஜக்கசமுத்திரத்தில் குடியிருந்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். 14.11.2023ம் தேதி மாலை சுமார் 06.45மணிக்கு இறந்து போன குழந்தையின் வீட்டிற்கு முன்னால் ஓரத்தில் தீனா விளையாடிக்கொண்டிருந்தார். அவருக்கு வயது 3. மாரண்டஹள்ளியில் இருந்து தக்காளி லோடு ஏற்றிக்கொண்டு ஜிட்டாண்டஹள்ளியில் உள்ள தக்காளி மண்டிக்கு லோடை இறக்க வேகமாக சென்று கொண்டிருந்தது. அங்கிருந்த வேகத்தடையிலும் வண்டியின் வேகத்தை குறைக்கவில்லை. விளையாடிக்கொண்டிருந்த தீனாவின் மீது இடித்து தள்ளி பின்பக்க சக்கரம் தீனாவின் தலையின் மீது ஏறி தலை நசுங்கியது தீனா சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். நானும் சம்பவ இடத்தில் தான் இருந்தேன். நானும், தீனாவின் அம்மா அலமேலு, அப்பா பார்த்திபனும் குழந்தைக்கு உயிர் இருக்கிறதா என்று பார்த்தோம் உயிர் இல்லை. ஊர்க்காரர்கள் கூடிவிட்டார்கள். பின் ஆம்புலன்ஸ் மூலம் தர்மபுரி அரசு மருததுவமனைக்கு எடுத்துச்சென்றோம். இது குறித்து பார்த்திபன் மகேந்திரமங்கலம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். ஆஜர் எதிரி தான் சம்பவத்தின் போது விபத்தை ஏற்படுத்திய பிக்கப் வாகனத்தை ஓட்டி வந்தவர் ஆவார். அவர் ரோட்டின் வளைவிலும், வேகத்தடையிலும் வாகனத்தின்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.04.18 13:10:16 +0530

வேகத்தை குறைக்கவில்லை. மறுநாள் காலை காவல்நிலையத்தில் வைத்து போலிசார் எங்களை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

பிரபாகரன் எனக்கு மாமா உறவு முறை ஆகும். என்னிடம் காட்டப்படும் போலிசார் வாக்குமூலத்தில் எனது மாமா பிரபாகரன் என்றும், அவரது மகன் மூன்று வயது தீனா என்பவருக்கு விபத்து ஏற்பட்டது என்றும் கூறினேனா என்றால் சரிதான். எனது பெயர் பிரபாகரன் என்று சொன்னேன். சம்பவத்தின் போது நான் எங்கு இருந்தேனா என்றால் சம்பவ இடத்தில் இருந்து மூன்று முதல் நான்கு அடி துரத்தில் மளிகை கடை வாசலில் நான் இருந்தேன். நான் அங்கு பத்துநிமிடங்கள் இருந்தேன். குழந்தை பார்த்திபன் வீட்டின் முன்பாக விளையாடிக்கொண்டிருந்தது. மளிகை கடையில் என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் வேறு நபர்கள் இருந்தார்கள் அவர்கள் பெயர் விபரம் தெரியாது. மளிகை கடை ரோட்டின் கிழக்கு திசையில் உள்ளது. ரோட்டின் கிழக்கு திசையில் தான் குழந்தையின் வீடு உள்ளது. சம்பவ சாலையானது முதலில் வளைந்து பிறது நேரக சென்று பின் மீண்டும் வளைந்து செல்கிறது என்றால் சரிதான். சம்பவ சாலையில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். சம்பவ சாலை நேராக எவ்வளவு தூரம் செல்கிறது என்றால் 100–150 அடி தூரம் செல்கிறது. நான் விவசாயம் செய்கிறேன். பொதுவான வளைவான பகுதியில் லோடுடன் கூடிய வாகனம் மெதுவாக செல்லும் என்றாலும் மேலும் வேகத்தடையில் வாகனம் மெதுவாக தான் செல்லும் என்றாலும் சரிதான், எதிரி வேகமாக சென்றார். நான் மளிகை கடையில் பொருள் வாங்கி கொண்டிருந்த சமயத்தில் விபத்தை பார்த்தேனா என்றால் சரியல்ல வாகனம் மோதுவதை பார்த்தேன். வாகனத்தின் எந்த பகுதி குழந்தையின் மீது மோதியது என்றால் வலது பக்க நடுபகுதியில் வாகனத்தின் பாடியும் மோதி குழந்தையின் தலையின் மீது வலது பக்க பின்சக்கரம் ஏறி விபத்து ஏற்பட்டது. எதிரி வாகனத்தை நிதானமாகவும், கவனமாகவும் இயக்கினார் என்றாலும், குழந்தை விளையாடிக்கொண்டு வாகனத்தை கவனிக்காமல் விபத்தை ஏற்படுத்திக்கொண்டது என்றால் சரியல்ல. எதிரி வாகனத்தை வேகமாக இயக்கவில்லை என்றாலும்சரியல்ல. விபத்திற்கு குழந்தை தான் காரணம் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.04.18 13:10:24 +0530

Judicial Magistrate,
Palacode.